**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**அசல் வழக்கு எண்.** 14/2022

**வாக்குமூலம்.வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பெரியையா | தொழில் | |
| த/பெ. | வேலன் | வயது | 61 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 15.09.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் நான் அனுபவம் செய்யும் சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துயிருக்கிறேன். நான் குறிப்பிடும் சொத்தின் புலஎண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீர்ணம் எவ்வளவு என்றால் 100 குழி ஆகும். தாவா சொத்தின் வகைப்பாடு என்ன என்றால் புறம்போக்கு இடத்திற்கு வழக்குப்போட்டு இருக்கிறேன். தாவா சொத்து புஞ்சை வகைப்பாட்டு நிலம் ஆகும். தாவா சொத்திற்குரிய வருவாய் ஆவணங்கள் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கில் என்ன வருவாய் ஆவணம் தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாவில்லை தம்பி தான் வழக்குப்போட்டார். வழக்கிற்கான விபரத்தை யார் சொன்னது என்றால் எனது தம்பி தான் சொன்னார். தாவா சொத்து நாளது தேதியில் அரசு வருவாய் கணக்குகளில் என்ன வகைபாடாக உள்ளது என்பது எனக்கு தெரியாது.

2. ஊர்வணி கிராமத்தில் ஆமஞ்சி வடிகால் வாய்காலை ஆக்கிரமித்து வைத்து இருப்பதாக ஊரில் புகார் கொடுத்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி புகாரை சுப்பிரமணியன் என்பவர் கொடுத்தார். சுப்பிரமணியன் என்பவரை தாவா வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**